MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# பாரதி படைப்புகளில் நகைச்சுவை

**முனைவர் பீ. பெரியசாமி,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி,
ஆரணி, திருவண்ணாமலை- 632317, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்:periyaswamydeva@gmail.com,
https://orcid.org/0000-0002-7395-9699.

# Humour in Bharathi's Works

**Dr. B. Periyaswamy,**
Assistant Professor, Department of Tamil,
Dr. MGR Chockalingam Arts College,
Arni, Thiruvannmalai – 632317, Tamil Nadu, India.
MAIL ID: periyaswamydeva@gmail.com
https://orcid.org/0000-0002-7395-9699.

JANUARY - FEBRUARY

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## Abstract

This article explores the element of humour (or Nakai) that comes through in the writings of the great poet, Mahakavi Bharathi. This study thoroughly examines this humour based on the rules laid out in the Meippaattiyal (the chapter on Emotional Aesthetics) of the very old text, Tholkappiyam. Tholkappiyar states that Nakai (Laughter/Humour) is the first of the Eight Essential Emotional States (Meippaadugal). Our research approaches Bharathi's works by focusing on the four types of situations (nilai) that cause humour, as defined by Tholkappiyar: ridicule (Ellal), youthfulness (Ilamai), foolishness (Pētaimai), and simple innocence (Madan). It also looks at how this humour surfaces both in the poet himself and in relation to others.

## Keywords

Bharathiyar, Tholkappiyam, Emotive States (Meippaadugal), Humour (Nakai), Bharathi's Literary Works.

## ஆய்வுச் சுருக்கம்

பாரதி எனும் மகாகவியின் படைப்புகளில் பயின்று வந்துள்ள நகையெனும் சுவையை இக்கட்டுரை தொல்காப்பிய மெய்ப்பாட்டியலின் அடிப்படையில் ஆராய்ந்துள்ளது. தொல்காப்பியர் கூறும் எண்வகை மெய்ப்பாடுகளில் முதலாவதாக அமைந்திருப்பது நகை. இது எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்று நான்கு நிலைகளன்களின் அடிப்படையில் தன்னிடத்தும் பிறனிடத்தும் தோன்றும் என்பதை அடிப்படையாகக் கொண்டு பாரதியின் படைப்புகளை இவ்வாய்வு அணுகியுள்ளது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## திறவுச் சொற்கள்

பாரதியார், தொல்காப்பியம், மெய்ப்பாடுகள், நகை, பாரதி படைப்புகள்.

## முன்னுரை

பாரதியின் படைப்புகள் கவித்துவமானவை மட்டுமல்ல, தனித்துவமானவையாகவும் விளங்குகின்றன. பக்தி, விடுதலை, இயற்கை, குடும்பம், அரசியல், பொதுவுடைமை எனப் பல்வேறு தடங்களிலும் தன் கவித்துவத்தால் பாதம் பதித்தவர் பாரதி. அவரின் படைப்புகளில் உள்ள உணர்ச்சி வெளிப்பாடுகளில் நகை என்பதை மட்டும் இவ்வாய்வுக் கட்டுரை எடுத்துரைக்கின்றது. உணர்ச்சியை சுவை என்றும் இரசம் என்னும் இலக்கண நூலார் கூறியுள்ளனர்.

## பாரதியார் படைப்புகளில் நகைச் சுவை

மெய்ப்பாடு என்பது ஒருவன் உள்ளத்தில் ஏற்பட்ட மாற்றத்தை (உணர்வை) ஆய்ந்து உணராமல், கண்ட நொடியில் உணர்ந்துக் கொள்ளக் கூடியதே ஆகும். இதனை செயிற்றியம்,

**“உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல்**

**மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே”**

**(தொல்.மெய்.நூ.1, இளம். உரை மேற்கோள்)**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

என்று கூறியுள்ளது. இதனையே,

**"உய்த்துணர்வு இன்றித் தலைவரும் பொருளான்**

**மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்"(தொல். செய். நூ.202)**

என்று தொல்காப்பிய செய்யுளியல் கூறியுள்ளது.

## மெய்ப்பாட்டின் வகை

மெய்ப்பாட்டினை பொதுவாக எட்டு வகையாக்க் கொள்வர். இதனை,

**நகை முதலாம் இரு நான்கும் மெய்ப்பாடும்**

**நிகழ்பொருள் மெய்ப்பட நிற்ப மெய்ப்பாடே" (நம்பி.நூ.231)**

என்கிறது நம்பியகப்பொருள். இதனையே, தண்டியலங்காரம் சுவையணி என்பதில் (நூ.16,நூ.17) கூறியுள்ளது.

தொல்காப்பியத்தில்,

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**

**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**

**அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப (தொல்.மெய்.நூ.3)**

என்று எட்டு வகையை எடுத்தோதியுள்ளார் தொல்காப்பியர். மேலும், இதனை விரித்தோதுங்கால் முப்பத்திரண்டு வகையாகும் என்பதை,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**“பண்ணைத் தோன்றிய எண்நான்கு பொருளும்**

**கண்ணிய புறனே நால்நான்கு என்ப” (தொல்.மெய்.நூ.1)**

என்று தொல்காப்பியம் கூறியுள்ளது.

இதனடிப்படையில் நோக்கின் முதன்மை மெப்பாடுகள் எட்டு என்பதும் அதனடியாய் ஒவ்வொன்றும் நான்கு நிலைக்களன்களைக் கொண்டு பிறப்பவை. எனவை அவை மொத்தம் முப்பத்திரண்டு (8x4=32) என்பதும் தெளிவு.

## நகை

நகை என்பது தான் பிறரை எள்ளி நகையாடுவதாலும், பிறர் தன்னை எள்ளி நகையாடுவதாலும் தோன்றும் இது எள்ளல், இளமை, பேதைமை, மடமை எனும் நான்கு நிலைகளில் உருவாகும். இதனை,

**எள்ளல் இளமை பேதைமை மடனென்று**

**உள்ளப் பட்ட நகைநான் கென்ப” (தொல்.மெய்.நூ.4)**

என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இதற்கு உரை வரைந்த இளம்பூரணர் **“நகை என்பது இகழ்ச்சியுன் பிறப்பு”** (தொல்.பொருள்.இளம்பூரணர் உரை.ப.24) என்று கூறியுள்ளார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## எள்ளல்

எள்ளி நகையாடுதல் எள்ளல் எனப்படும். இது தான் பிறரை எள்ளி நகையாடுமிடத்தும் பிறன் தன்னை எள்ளி நகையாடுமிடத்தும் உண்டாகும். இது பாரதியின் பாஞ்சாலி சபதத்தில்,

**“செய்யவும் கூலிகள் கேட்கவும் – உன்றன்**

**சேயிழை வைத்தனர் பாண்டவர்” (பாஞ்சாலி சபதம், பா.67)**

என்பதில் பாண்டவர் நடத்திய நாஜசுய யாகத்திற்காக வைக்கப்பட்ட முதல் படையல் உமது மகனுக்குக் கொடுக்கவில்லை. பல அரசர்கள் வீற்றிருந்த அரசவையில் அனைவரும் ஆச்சரியப்படும்படி கண்ணனுக்குக் கொடுத்து உன் மகனைப் பலரும் கேலி பேசும்படி அந்த பாண்டவர்கள் செய்துவிட்டனர் என்று சகுனி கூறுமிடத்து, எள்ளல் எனும் மெய்ப்பாடு வெளிப்பட்டுள்ளதை நம்மால் அறிய முடிகின்றது.

## இளமை

இளமை என்பது குழந்தை தனம். தன் வயதுக்கு ஏற்றார்போல் நடவாமல் குழந்தை போல் நடக்கும் மனவியல்பு. இதனை “**இளமை பொருள் ஆயிற்று**” (தொல்.பொருள்.இளம். உரை, ப.349) என்று இளம்பூரணர் கூறியுள்ளார். இம்மெய்ப்பாடனது தன் இளமை கண்டு பிறர் நகைத்தலும், பிறர் இளமை கண்டு தான் நகைத்தலும் என இருவகையில் தோன்றும். இதை பாரதியாரின்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**தின்னப் பழங்கொண்டு தருவான் – பாதி**

**தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்**

**என்னப்பன் என்னையன் என்றால் அதனை**

**எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்" (கண்ணன்பாட்டு, ப.9)**

என்பதில் இளமை காலத்திய நகை வெளிப்படுவதைக் காணலாம். இதனையே வள்ளுவர்,

**குழல்இனிது யாழ்இனிது என்பர் தம்மக்கள்**

**மழலைச் சொல் கேளாதவர் (குறள்.66)**

என்பதில் இளமையின் சிறப்பே நகைச்சுவை என்பதை எடுத்துரைத்துள்ளார்.

## பேதைமை

பேதைமை என்பது அறிவின்மை ஆய்ந்து அறிந்துக் கொள்ள வேண்டியதை ஆய்ந்தறியா தன்மை என்பர். இதனை இளம்பூரணர் **"கேட்டு அதனை உயத்துணராது மெய்யாகக் கோடல்"** (தொல்.பொருள்.இளம்.ப.349) எனக் கூறியுள்ளார். இதனை வள்ளுவர்,

**பேதைமை என்பது ஒன்று யாதெனில் ஏதும் கொண்ட**

**ஊதியம் போக விடல் (குறள்.831)**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

என்று கூறியுள்ளார். பாரதியாரின் குயில்பாட்டு

**“வந்துமது பாதில் மதுரவிசை பாடுவேன்**

**வந்து முதுகில் ஒதுங்கிப் படுத்திருப்பேன்**

**வாலிலடி பட்டு மனம்கிழ்வேன் மா வென்றே**

**ஓலிடு நும் பேரொலியோ டொன்றுபடக் கத்துவேன்”**

**(குயில்பாட்டு, பா.அடி.49-52)**

என்று குயிலின் பேதைமையை எடுத்துரைக்கிறது.

## மடன்

மடன் அன்பது அறியாமை. அதனை பேராசிரியர் தமது உரையில் **“பெரும்பாலும் கொளுதங் கண்டு கொண்டது விடாமை”** (தொல்.மெய்.ப.5) என்று கூறியுள்ளார். இது தம்மிடத்தும் பிறனிடத்தும் தோன்றும் அறியாமையின் காரணமாக வெளிப்படும். இதனை பாரதியின்,

**மன்னருக்கு நீதி யொருவகை – பிற**

**மாந்தர்க்கு நீதி மற்றோர் வகை என்று**

**சொன்ன வியாச முனிவனை – இவன்**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**சுத்த மடையனென் நெஞ்ணியே (பாஞ்சாலி சபதம்,ப.87)**

என்ற பாஞ்சாலி சபத பாடலில் துரியோதனன் சகுனியின் சொற்களில் மறைந்திருக்கும் தீமையை அறியாமல் நீதி தவறி நடப்பதை எடுத்துரைகிறது. இது மடன் எனும் நகைக்கு சிறந்த எடுத்துக்காட்டாய் திகழ்கிறது.

## முடிவுரை

பாரதியின் படைப்புகளில் அவர் கையாண்டுள்ள நகைச்சுவையின் இயல்பை இவ்வாய்வுக் கட்டுரையானது நகையின் பிறப்பிடங்களான எள்ளல், இளமை, பேதைமை, மடன் எனும் நான்கினடிப்படையிலும் ஆராய்ந்துள்ளது. பாரதி தனியாக ஒரு நகைச்சுவையை உருவாக்க ஒரு கருத்தை உருவாக்கவில்லை. மாறாக, இயல்பாகவே அவர் படைப்புகளில் நகைச்சுவை வெளிப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரையின் வழி நம்மால் அறிந்துக் கொள்ள முடிகிறது.

## துணைநூற்பட்டியல்

1. அண்ணாமலை. அழ., பாரதியார் கவிதைகள், அபிராமி பதிப்பகம், சென்னை 2008.
2. இராம சுப்பிரமணியன் வ.த (உரை), நம்பியகப்பொருள், பாரி நிலையம், சென்னை, 2017.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

3. இளம்பூரணர். (உரை), தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, 2005.
4. சுப்பிரமணியன் ச.வே., பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2019.
5. தமிழண்ணல் (உரை), தண்டியலங்காரம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2017.
6. பேராசிரியர் (உரை), தொல்காப்பியம் பொருளதிகாரம், கழகம், 1968.
7. வெள்ளைவாரணர். க, தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1986.

## References

1. Annamalai, Azh. (Ed.), Bharathiyar Kavithaigal, Abirami Pathippagam, Chennai, 2008.
2. Rama Subramanian, V.T. (Urai), Nambiyagapporul, Pari Nilayam, Chennai, 2017.
3. Ilampooranar. (Urai), Tholkappiyam Porulathikaram, Saradha Pathippagam, Chennai, 2005.
4. Subramanian, S.V., Pathinen Kilkanakku Noolgal, Manivasagar Pathippagam, Chennai, 2019.
5. Tamilannal (Urai), Thandiyalangaram, Meenakshi Puthaka Nilayam, Madurai, 2017.
6. Professor (Urai), Tholkappiyam Porulathikaram, Kazhagam, 1968.
7. Vellaivaranar, K., Tholkappiya Meippattiyal Uravalam, Madurai Kamaraj University, Madurai, 1986.